Registered as a News paper | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 07

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு | மக்கள் நாளிதழ்
Eezhanatham
நாதம் 01 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 27 | 12.11.2004 | வெள்ளிக்கிழமை | ஓசை 165

# தேசியத் தலைவரை சந்தித்து பீற்றர்ஸன் பேச்சுவார்த்தை!

## நோர்வே அமைச்சரூடாக ஜனாதிபதி புதிய யோசனை எதனையும் புலிகளுக்கு அறிவிக்கவில்லை



(நமது நிருபர்)

**இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் தமிழர் தாயகத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அமைக்கப்பட வேண்டும் என்பதையும் தமிழீழத் தேசியத் தலைவர் நோர்வே வெளியுறவு அமைச்சிடம் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.**

அதேவேளை ஜனாதிபதி பழைய நிலைப்பாட்டில் இருந்து கடுகளவேனும் மாறவில்லை அத்துடன் புதிய நிலைப்பாடு பற்றி நோர்வே வெறியுறவு அமைச்சரூடாக எவ்விதத் தகவல்களையும் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கவுமில்லை நிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சன் ஊடாக சிறிலங்கா ஜனாதிபதி எதனையும் சொல்லி அனுப்பவில்லையென தமிழீழ விடுதலைப்

(தொடர்ச்சி 08ம் பக்கம்)

## களுவன்கேணி வீதியில் கைக்குண்டு வீச்சு தப்பி ஓடிய ஈ.பி.டி.பி-உறுப்பினர் கைது!

(நமது நிருபர்)

வந்தாறுமூலை களுவன் கேணி வீதியில் இரு மீனவர்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்திய ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர். நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் செங்கலடி ஈ.பி.டி.பி அலுவலகத்தைச் சேர்ந்த அர்ச்சுனன் விஜயகுமார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று பிற்பகல் களுவன் கேணியைச் சேர்ந்த துரைராஜா விமலேந்திரன், நல்லதம்பி- பேரின்பராசா ஆகிய இரு மீனவர்களும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ள நபர் கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இது இலக்குத் தவறி வெடித்ததையடுத்து கைக்குண்டொன்றை வீசியுள்ளார். இக் கைக்குண்டு வீச்சையடுத்து மேற்படி நபர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு ஓடியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தைப் பார்த்து மேற்படி நபர் மோட்டார் சைக்கிளைத் திருடிக் கொண்டு ஏறாவூருக்குச் சென்றபோது கைது செய்யப்பட்டுள்ளார். இன்று மட்டக்களப்பு நீதிமன்றில் மேற்படி நபர் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு காத்தான்குடியில் நோன்பு பெருநாள் வியாபாரம்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனித நோன்புப் பெருநாள் வியாபாரம் தற்போது களைகட்டியுள்ளதை காணக் கூடியதாய் உள்ளது. மட்டக்களப்பு கடைத் தெருவில் காலை முதல் மாலை 8.00 மணி வரை கடைகள் திறக்கப்பட்டு பல இடங்களில் இருந்தும் மக்கள் பொருட்களை கொள்வனவு செய்வதையும் வீதி ஓரங்களில் நடைபாதைக் கடைகள் இடப்பட்டு விற்பனை

(தொடர்ச்சி 08ம் பக்கம்)

## சிறுமி மீள ஒப்படைப்பு

(நமது நிருபர்)

சுயவிருப்பின் பேரில் இணைய வந்த சிறுமி விடுதலைப் புலிகளினால் மீள பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அரசடித் தீவு மகளிர் மாவட்டச் செயலகத்தில் வைத்து மகளிர் துணை அரசியல் பொறுப்பாளர் சசிமதி மேற்படி சிறுமியை நேற்று ஒப்படைத்தார்.

### இன்றைய நாளில்

### தகவற்துளி

கொலம்பஸ் அமெரிக்கா போய்ச் சேர்ந்த நாள் [1492], கடற்கரும்புலி மேஜர்-கோபி, முல்லை மணலாறு மாவட்ட சிறப்புத் தளபதி லெப்.கேணல்-அன்பு, கடற்புலிகளின் மகளிர் படைத் தளபதி லெப்.கேணல்-பாமா ஆகியோர் நினைவு நாள்[1993]

## யசீர் அரபாத்தின் மறைவு கேட்டு உலகத் தலைவர்கள் அனுதாபம்



பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் மறைவு குறித்து உலக நாடுகளின் தலைவர்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்தவண்முள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ், ரஷ்ய ஜனாதிபதி, இந்தியப் பிரதமர், பாகிஸ்தான் அதிபர், பிரிட்டிஷ் பிரதமர் உட்பட உலக நாடுகளின் தலைவீர்கள் இரங்கற் செய்திகளை விடுத்தவண்ணமுள்ளனர்.

அத்துடன் இன்று பலஸ்தீன கைரோ நகரில் இடம்பெறும் இறுதிச் சடங்கில் பல தலைவர்கள்

(தொடர்ச்சி 08ம் பக்கம்)

## அரபாத்தின் மறைவினால் ஈழத்தமிழினம் கவலை கொண்டுள்ளது

**-அன்ரன் பாலசிங்கம்-**

பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தின் மறைவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் கவலையளித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தின் மறைவு குறித்து நேற்று கிளிநொச்சியில் செய்தியாளர்கள் கேட்டபோது:-

இன அடக்குமுறைக்கு எதிராக விடுதலைப் போராட்டமொன்றை முன்னெடுத்தவர் என்ற வகையில் அவரது மறைவு கவலையளிக்கின்றதென அரசியல் ஆலோ

(தொடர்ச்சி 08ம் பக்கம்)

## மாவீரர் தினத்தை முன்னிட்டு கரடியனாற்றில் மருத்துவ சேவை

### 400க்கு மேற்பட்டோருக்கு சிகிச்சை

(நமது நிருபர்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு மட்டு அம்பாறை மருத்துவப் பிரிவினரின் நடமாடும் மருத்துவ சேவை புதன் கிழமையன்று கரடியனாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மட்டு- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நடாத்தப்பட்ட இந்த மருத்துவ முகாமில் கரடியனாறு, ஆயித்தியமலை, கித்துள், சின்னப்புல்லுமலை, இலுப்பையடிச்சேனை, பன்குடாவெளி, கொடுவாமடு, வேப்பைவெட்டுவான் ஆகிய கிராமங்களைச் சேர்

(தொடர்ச்சி 08ம் பக்கம்)

## செய்தித் துளிகள்

### இரு நாள் சுகயீன விடுமுறைப் போராட்டம்

(ராஜா)

வடகிழக்கு சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினை தீர்க்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பிரதேச வைத்தியசாலை ஊழியர்கள் செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களிலும் சுகயீனம் விடுமுறையில் சென்றுள்ளனர்.

இதில் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் எழுதுவினைஞர் ஏனைய அலுவலக ஊழியர்கள் அடங்குவர். இவர்களது சம்பள முரண்பாடு தொடர்பாக வடகிழக்கு ஆளுநருடன் பலமுறை பேசியும் பயன் கிடைக்கவில்லை. இதனால் இச்சுகயீன விடுமுறையில் தாம் இறங்கியதாக இவ்ஊழியர்களின் சங்கமான சுய சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

### முஸ்லிம் மாணவர் முன்னணியில் மூன்று நாள் செயலமர்வு

(முஸ்தபா)

சிறிலங்கா முஸ்லிம் மாணவர் முன்னணியில் இரு நாள் செயலமர்வு கடந்த 08 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. முன்னணியின் தலைவர் மௌலவி கலிலுர்றகுமான் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 200ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

மாவட்ட மாணவர் முன்னணியில் தலைவர் எம்.ஏ.பைசுர் றகுமான், முன்னணிச் செயலாளர் ஏ.எம்.அஜ்மல், விரிவுரையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா, விரிவுரையாளர் சிறாஜ் மஹ்ஹீ, மௌலலி எம்.எல்.எச்.பசீர், மௌலவி ஏ.எ.எல்.நசீர் கனி, மௌலவி ஐ.ஏ.ஏ. எச்.வலியுல்லா உட்பட பலரும் அங்கு உரை நிகழ்த்தினர்.

மாணவர்கள் குழுநிலைச் செயற்பாடுகள், கலை நிகழ்ச்சிகள், வினாவிடைப் போட்டிகள், உடற்தகமை நிகழ்ச்சிகள் போன்றவற்றிலும் பங்கு பற்றினர். வதிவிடப் பாசறையாக இந்நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### தலைமைத்துவ பயிற்சி

(கர்சனன்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் யுனிசெப் நிறுவனமும் இணைந்து சத்துருக்கொண்டான் பயிற்சி கலாசார மண்டபத்தில் இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி நடைபெற்றது.

கடந்த 07 ஆம் திகதி தொடக்கம் 09 ஆம் திகதி வரை நடைபெற்ற பயிற்சியில் 48 இளைஞர் யுவதிகள் தலைமைத்துவப் பயிற்சியை பூர்த்தி செய்தனர்.

### ஊடகவியலாளருக்கான சமாதானக்கருத்தரங்கு

(முஸ்தபா)

கல்முனை சமாதான அமைப்பினர் இனநல்லுறவைப் பேணும் வகையில் நடாத்தும் ஊடகவியலாளருக்கான சமாதானக் கருத்தரங்கு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை கிறிஸ்ரா இல்ல மண்டபத்தில் இடம் பெற்றது. சமாதான அமைப்பின் தலைவர் பி.தேவகடாட்சம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரபல எழுத்தாளர் பரதன் கந்தசாமி கருத்தரங்கை நடாத்தினர்.

கருத்தரங்கில் விரிவுரையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா, எம்.எல்.எம்.ஜமால்தீன், எம்.சம்சுதீன், எஸ்.சிராஜ்தீன், றபீக்பிரிதலுஸ், நளீம் பதுர்தீன் உட்பட பலரும் பங்குபற்றி கருத்துரை வழங்கினார்கள்.

### வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு நுளம்பு வலைகள்

(கர்சனன்)

ஏறாவூர் பற்று பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு வேள்ட் விசன் நிறுவனம் மற்றும் உலக உணவுத் திட்ட நிறுவனமும் இணைந்து நுளம்புவலைகள், மற்றும் மருந்துப் பொருட்களை வழங்கி வருகின்றன. கொடுவாமடு, களுவன்கேணி கிராமங்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

# சிறிலங்காவின் நீதித்துறையைவிட தமிழீழ நீதித்துறை மேலானது

## - தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் நடேசன் -

(நமது நிருபர்)

**சிறிலங்காவின் நீதி மற்றும் பொலிஸ் ஊழல்கள் நிறைந்த இடம் என்பதை அந்நாட்டின் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவே ஒப்புக் கொண்டுள்ளதாக தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.**



நேற்று கிளிநொச்சியில் தமிழீழ சட்டக் கல்லூரி திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், தமிழீழ கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பிரதேசங்களில் நீதி மதிக்கப்பட்டு அந்த மக்களுக்கு பாகுபாடின்றி சேவை வழங்கப்படுவதாகக் கூறினார்.

சிறிலங்காவில் மக்களுக்கு சரியான நீதி கிடைப்பதில்லை. அது மறுக்கப்படுகின்றது. நீதியாளர்களுக்கு நீதி செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அங்கே நீதியை நடத்துபவர்களும் நீதியை பராமரிப்பவர்களும் ஊழல் நிறைந்தவர்கள்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய நீதித்துறையினரும் பொலிசாரும் ஊழல் நிறைந்த மோசடிப் பேர்வழிகள் என்றும் இந்த இரண்டு துறைகளும் அவர்களின் புகலிடம் என்று அந்நாட்டின் ஜனாதிபதி பகிரங்கமாக செவ்வாயன்று நடைபெற்ற வைபவமொன்றில் ஒப்புக் கொண்டுள்ளார்.சமகாலத்தில் இரண்டு காவல்துறை மற்றும் நீதி நிர்வாகங்களையும் ஒப்பீட்[illegible] ரீதியில் பார்க்கும் போது தமிழீழத்தின் நீ[illegible] மற்றும் காவல்துறை நிர்வாகம் எதிர்த்தரப்பினரால் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் பாராட்டப்பட்டுள்ளது. இதற்கு காரணம் எமது விடுதலைப் போராட்டத்தின் ஆரோக்கியத் தன்[illegible], தீர்க்க தரிசனம், மற்றும் புரட்சிகரமான போராட்டத்தின் வழி நடத்தல் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# விடுதலைப் புலிகளின் பிரதேசத்தை உள்ளடக்கிய அபிவிருத்திப் பணி

## - ஹரீம் பீரிஸ் கூறுகின்றார் -

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும் என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரீம் பீரிஸ் நேற்றுமுன் வவுனியாவில் தெரிவித்துள்ளார்.

வடக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய இந்தப் பணிகள் குறித்து மாவட்ட அரசாங்க அதிபர்கள் விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகளுடன் ஆராய்ந்த பின்பு செய்தியாளர்களுக்குத் கருத்து தெரிவிக்கையில்,

20 வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மக்களுக்கு தற்போது உடனடித் தேவையாக இருப்பது புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் அத்தியாவசிய மனிதாபிமான தேவைகளாகும்,

இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் வரை காத்திருக்க முடியாது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களையும் தேவைகளையும் அடையாளம் காண்பதற்கு அவர்களது ஒத்துழைப்பு எமக்கு [illegible]டைத்துள்ளது.

விடுதலைப் புலிக[illegible] இணைந்து செயற்படுத்தவிருக்கும் இந்தச் செயற்பாடானது எந்தவித அரசி[illegible] நோக்கத்தையும் கொண்டதல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு வந்திறங்கிய பீற்றர்சன் ஜனாதிபதியை சந்தித்து பேசினார்

(நமது நிருபர்)

தற்போது கொழும்பில் தங்கியுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சன் தலைமையிலான குழுவினர் நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் நோர்வே அமைச்சருடன் அந்நாட்டின் துணை அமைச்சர் விதார் ஹெல்கீசன், விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹேய்ம், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும்,

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் கலந்து கொண்டார்கள்.

இந்தச் சந்திப்பில் கிளிநொச்சியில் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் இடம்பெறவிருக்கும் சந்திப்பு தொடர்பாகவும் இருதரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறியுள்ளனர்.

ஜனாதிபதியின் செய்தியொன்றுடன் நேற்று நோர்வே பிரதிநிதிகள் கிளிநொச்சி சென்றார்கள்.

நேற்று முன் மாலை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த நோர்வே அமைச்சர்களை இலங்கை வெளிவிவகார துணை அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலா அரசாங்கத்தின் சார்பில் வரவேற்றார்.

# இருதரப்பினரிடையேயும் நம்பிக்கையை ஏற்படுத்துவதே நோர்வேயின் நோக்கம்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதியை தீர்மானிப்பதை விட இரு தரப்பினருக்குமிடையில் தற்போது சீர்குலைந்துள்ள நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதே நோர்வே எதிர்நோக்கும் பிரதான சவால் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்சன், துணை அமைச்சர் விதார் ஹெல்கீசன், விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹேய்ம் ஆகியோர் தற்போது இலங்கையில் தங்கியிருக்கின்றார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தையுடன் தொடர்புடைய தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை இவர்கள் மேற்கொண்டிருந்தாலும் இருதரப்பு சமாதானப் பேச்சுவார்த்தை குறுகிய காலத்திற்குள் ஆரம்பமாகும் என்ற எதிர்பார்ப்பு நோர்வேயிடம் இல்லை.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளின் கருத்துக்களின் படி, இடைக்கால நிர்வாக யோசனையின் படி பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக வேண்டும் என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டாலும் அது தொடர்பான நிகழச்சி நிரலிலுள்ள சில வசனங்களில் இரு தரப்பினரிடையேயும் கருத்து முரண்பாடு காணப்படுகின்றது.

இதற்கு காரணம் இரு தரப்பினருக்குமிடையில் காணப்படும் நம்பிக்கையீனமாகும். பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது அல்லது அதில் பேசப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக முரண்பாடுகள் இல்லை போல் தெரிகின்றது.

அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது சந்தேகம். அது போல் விடுதலைப் புலிகள் அரசாங்கம் தொடர்பாக நம்பிக்கையில்லாத் தன்மை காணப்படுகின்றது. இதற்கு தீர்வு காணும் வரை இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும் என எதிர்பார்க்க முடியாதுள்ளது.

இந் நிலையில் தற்போது இரு தரப்பினருக்குமிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்புவதே நோர்வே எதிர்நோக்குகின்ற பிரதான சவாலாகும்.

## ஊடகவியலாளர்கள் பயிற்சிப் பட்டறை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு அம்பாறை தமிழ் இளம் ஊடகவியலாளர் ஒன்றியமும், மட்டக்களப்பு எகெட் நிறுவனமும் இணைந்து நடாத்தும் ஒரு வாரகால ஊடகவியலாளர் பயிற்சிப் பட்டறைக்கான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மட்டக்களப்பு லேக் வியூ இன் விருந்தினர் விடுதியில் இடம் பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகள் கல்விச் சான்றிதழ்கள், கிராம உத்தியோகஸ்த்தர் நற்சான்றிதழுடனும் சமூகமளிக்கவும். ஊடகவியலாளர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 03 ஆம் திகதிவரை மட்டக்களப்பு மன்றேசா பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

# பிரதியமைச்சர் மேர்வின் திடீர் இராஜினாமா!

(நமது நிருபர்)

வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதியமைச்சர் மேர்வின்சில்வா தனது பதவியை நேற்று முன்தினம் இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை நேற்று முன்தினம் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார். கடந்த வாரம் கொழும்பிலுள்ள விளையாட்டுக் கழகமொன்றின் அலுவலகத்துக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்து தாக்கியதாக இவரது மகன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில் பிரதியமைச்சர் மேரவின் சில்வாவும் சம்பந்தப்பட்டதோடு கைத்துப்பாக்கியுடன் அங்கு சென்றதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், பொலிசார் அப்படி எதுவும் இல்லையென அதனை நிராகரித்திருந்தனர்.

இது தொடர்பாக ஆளும் கட்சிக்குள் ஜே.வி.பி. போர்க் கொடி தூக்கியிருந்தது. தன்மீது சுமத்தப்பட்டுள்ள இக் குற்றச்சாட்டிற்கு சுதந்திரமான விசாரணை இடம்பெற வேண்டும் என்பதற்காகவும் ஜனாதிபதியின் கௌரவத்தை பாதுகாப்பதற்காகவும், தான் நிரபராதி என நிரூபிக்கப்படும் வரை எந்தப் பதவியையும் வகிக்கப் போவதில்லையென தனது இராஜினாமா பற்றி அவர் அறிவித்துள்ளார்.

# முஸ்லிம்களிடையே சுமுகநிலை ஏற்பட்டதையடுத்து காத்தான்குடியிலிருந்து சிறிலங்கா பொலிசார் நீக்கம்

(காத்தான்குடி நிருபர்)

**காத்தான்குடியில் கடந்த இரண்டு வாரங்களாக கண்காணிப்புப் பணியில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு தற்போது நீக்கப்பட்டுள்ளது இருந்தும்.**

பத்துறியா ஜும்மா பள்ளி வாயலில் மாத்திரம் ஐந்து பொலிசார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவதையும் ஏனைய பிரதேசங்களில் வழமையான நடவடிக்கையினையே காண முடிகிறது.

பெருந்தொகையான பொலிசார் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான முன்னெடுப்புக்கள் வேகமாக தொடர வேண்டும்


## ஜெயா எம்.பி. தீபாவளி செய்தி

(சலன்)

தீமைகள் அகன்று நன்மைகள் உதயமாகும் இன்பத் திருநாளாக தீபத்திருநாள் மலர வேண்டும் அத்துடன் கடந்த இரண்டரை வருடகாலமாக எவ்வித முன்னேற்றமும் இன்றி பிசுபிசுத்துப் போயுள்ள சமாதான முன்னெடுப்புக்கள் வேகமாகத் தொடரப்பட்டு எமது மக்கள் வாழ்வில் நம்பிக்கை தரக்கூடிய ஒளியேற்பட சகலரும் இன்றைய நாளில் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் ஜெயானந்தமூர்த்தி எம்.பி. மேலும் குறிப்பிடுகையில் அமைதிப் பேச்சுக்காக மூன்றாந்தரப்பினராகத் தொழிற்படும் நோர்வேப் பிரதிநிதிகள் இந்த மண்ணிலுள்ள இவ்வேளை



யில் தீபத்திருநாள் மலர்ந்துள்ளமை நல்லதொரு திருப்புமுனையை உண்டுபண்ணுமென நம்புகின்றேன். கடந்த இரண்டரை வருடகாலமாக அமைதி நிலவுகின்ற போதிலும் ஸ்ரீலங்கா அரசின் மனப்பாங்கு காரணமாக அமைதிப் பேச்சுக்கள் பிசுபிசுத்துப் போயுள்ளமை உலகறிந்த உண்மையாகும்.

எனினும் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக பல்வேறுபட்ட வழிகளிலும் பாதிக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வில் புதிய ஒளி உண்டாகவும் புலிகளால் முன்வைக்கப்படுகின்ற இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை கிடைக்கப் பெற்று எமது மக்களுக்கான சேமநலப் பணிகள் நிறைவேற்றப்படவும் இறைவனை வேண்டி இந்நாளில் நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டுமென்று அவ் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## சமாதானக்குழு தலைவர் இறைபதம்

(காரைதீவு நிருபர்)

காரைதீவு சமாதான மத்தியஸ்த சபையின் தலைவரும், ஓய்வு பெற்ற அதிபருமான ச. வெற்றிவேல் தனது 72 வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

காரைதீவு மாவடி ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையின் தலைவராகவும், விபுலானந்த ஞாபகார்த்தப் பணிமன்ற நிருவாகசபை உறுப்பினராகவும், விபுலானந்தா மத்திய கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்க செயலாளராகவும் முன்பு பணியாற்றியிருந்தார். இவரது பூதவுடல் இந்து மயானத்தில் தகனக் கிரியை செய்யப்பட்டது.

# கல்முனை புதிய வலய கல்வி பணிப்பாளருக்கு மகத்தான வரவேற்பு

(ஏ.எல்.எம்.சலீம்)

கல்முனை கல்வி வலயத்தின் புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ள எம்.ரீ. அப்துல் நிஸாம் புதன் கிழமை தமது கடமையைப் பொறுப்பேற்பதற்கு முதன் முதலாக வலயக்கல்வி அலுவலகத்திற்கு வருகை தந்த போது மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விசேட துஆ பிரார்த்தனை, தேவாரம், ஜெபம் என்பவற்றுடன் ஆரம்பமான பதவியேற்பு நிகழ்வில், கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி அதிபர் ஸ்ரீபன் மெத்தியூ சமய ஆசியுரையாற்றியதுடன்,பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள்,ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட பலர் நிஸாமின் நியமனத்தை வரவேற்றும், பாராட்டியும் உரையாற்றினர்.

# கல்முனை வலய ஆண்டிறுதி பரீட்சை நடைபெறுவதில் சந்தேகம்

(வேதசகா)

கல்முனை வலயப் பாடசாலைகளுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை நடைபெறுவதில் சந்தேகம் எழுந்துள்ளதாக அதிபர்களும், பெற்றோர்களும் தெரிவிக்கின்றனர்.

வலயக் கல்விப் பணிமனை சார்பாக பரீட்சைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு பாடசாலைகளிலிருந்து பரீட்சை விபரம் பெறப்பட்ட நிலையில் தற்போது அது நடைபெற மாட்டாது என்று அதிபர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அதிபர்கள் சலித்துக் கொள்கின்றார்கள். வலயக் கல்விப் பணிப்பாளர் ஓய்வில் சென்றுள்ள காரணத்தினால் அப்பரீட்சை சபை சீராக இயங்க முடியாமையே இப்பரீட்சை நடைபெறமாட்டாது என்பதற்கு பிரதான காரணமாகக் கூறப்படுகின்றது. ஆண்டிறுதிப் பரீட்சைக்கான பத்திரங்களை வேறெங்காவது பெற்று நடாத்துமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். அக்கரைப்பற்று, சம்மாந்துறை வலயங்களில் பரீட்சை சபைகள் நடாத்தவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆலையடி வேம்பில் மக்கள் வங்கி திறப்பு

(வி.ரி.சகாதேவராசா)

மக்கள் வங்கியின் அம்பாறை மாவட்ட 8ஆவது நகை அடகு பிடிக்கும் நிலையம் நேற்று சம்பிரதாய பூர்வமாக ஆலையடிவேம்பில் திறந்து வைக்கப்பட்டது. ஆலையடிவேம்பு மக்கள் நீண்ட நாட்களாக விடுத்த வேண்டுகோளின் பலனாக நேற்று இக்கிளை திறந்து வைக்கப்பட்டதாக அக்கறைப்பற்று மக்கள் வங்கி முகாமையாளர் எம்.எம்.சமீட் தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் அம்பாறைப் பிராந்திய முகாமையாளர் பி.மலலகம இக்கிளையை ஆரம்பித்தார். ஏலவே அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மக்களின் நலன் கருதி சாய்ந்தமருது, சம்மாந்துறை, மத்திய முகாம்,ஒலுவில், இறக்காமம், பதியத்தலாவ ஆகிய 06 கிளைகள் திறந்து வைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது

# தினேஸ் இராசரெத்தினத்தை விடுவிக்குமாறு கோரிக்கை

(நமது நிருபர்)

ஈராக் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரான தினேஸ் தர்மேந்திரா இராஜரெத்தினத்தை விடுவிக்கக் கோரி அஸ்ரப் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ் வேண்டுகோள் கட்டாரிலுள்ள 'அல் ஜசீரா' தொலைக் காட்சிக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் ஈராக்கிற்கும் இலங்கைக்குமிடையிலான நட்புறவு, ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் ஈராக்கிற்கு படை வீரர்களை அனுப்பி வைக்க மாட்டேன் என இலங்கை ஜனாதிபதி குறிப்பிட்டது போன்றன நினைவுபடுத்தப்பட்டுள்ளது.

# முதலுதவியாளர்கள் சமூக சொத்தாக மதிக்கப்பட வேண்டியவர்

(வி.ரி.சகாதேவராசா)

''உயிர் காக்கும் கலையில் எந்த வித பிரதி பலனையும் எதிர் பாராமல் சேவை புரியும் முதலுதவியாளர்கள் சமூகச் சொத்தாக மதிக்கப்பட வேண்டியவர்கள்''.

இவ்வாறு கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற முதலுவிப் பயிற்சிப் பாசறையில் உரையாற்றிய வித்தியாலய அதிபர் க. ஆனந்தராஜா கூறினார். மட்டு மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவின் இப்பட்டறை மாவட்ட ஆணையாளரும், பயிற்றுவிப்பாளருமான ஐ.எல். ஜலீல் தலைமையில் நடைபெற்றது.

அங்கு அதிபர் ஆனந்தராசா மேலும் பேசுகையில்:-

''இன்று மானிட குலத்தின் சேவைக்காக தங்களினை முழுமையாக அர்ப்பணித்து மாணவர்களுக்கு சிறந்த பயிற்சியை வழங்கி வருகின்ற சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவு பாராட்டப்பட வேண்டியது என்றார். பட்டறையில் 75 மாணவ மாணவிகள் பங்கு பற்றினர். ''மதுர'' அணி 270, ''டைட்டானிக்'' அணி 366, ''கில்லி'' அணி 360 புள்ளிகளையும் பெற்றனர்.

# சட்டத்தை மட்டும் கையில் எடுக்காது சட்டத்தரணிகள் நன்நோக்கோடு வாதாட வேண்டும்

## உபவேந்தர் ஹுசைன் இஸ்மாயில்

(அட்டாளைச்சேனை நிருபர்)

சட்டத்தரணிகள் சட்டத்தை மட்டும் கையில் எடுத்துக் கொள்ளாமல் சத்தியத்தையும் சேர்த்து மக்களுக்காக சாந்தமான மனதோடு நீதி கிடைக்க வேண்டும் என்ற நன்நோக்கோடு வாதாட வேண்டும்.

அப்போதுதான் சமுதாயத்தில் மனிதாபிமானம் மிக்க சட்டம் நிலை நாட்டப்படும் எனத் தென்கிழக்கு பல்கலைக் கழக உப வேந்தர் கலாநிதி ஏ.ஜி ஹுஸைன் இஸ்மாயில் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக் கழக மொழிகள் கலாசாரத்துறைத் தலைவர் கே.எம்.எச்.காலித்தீன் தலைமையில் அண்மையில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மீலாத் மண்டபத்தில் சட்டத்தரணி இஸ்மாயில் பி.மஆரிப் எழுதிய 'அரசியல் நெருக்கடிகளும், முரண்பாடுகளும் ஒரு சமகாலப் பார்வை'' எனும் நூல் அறிமுக விழாவின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உப வேந்தர் மேலும் குறிப்பிடுகையில்:- சட்டம் என்பது நீதி, நேர்மை போன்றவற்றை நிலை நாட்டக் கூடியதாகவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படும் அதேவேளை நிரபதாரிகள் தண்டிக்கப்படாமலும் அமைய வேண்டும். இன்று சட்டமானது அநீதிம் இழைத்தவர்களையும், சமூகத் துரோகிகளையும் காப்பாற்றுவதற்காக வாதாடப் பயன்படுகின்றது. இந்நிலை மாற்றமடைய சட்டத்தரணிகள் இறையச்சம் கொண்டு சட்டத்தோடு கூடிய சத்தியத்தையும் நிலைநாட்ட முயற்சிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# வீதிப்போக்குவரத்து தொடர்பாக கிளிநொச்சியில் கருத்தூட்டல்

(நமது நிருபர்)

கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான வீதிப் போக்குவரத்து தொடர்பான கருத்தூட்டல் புதன் கிழமை நடத்தப்பட்டது. இக்கருத்தூட்டலில் வாகனப் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பாளர் சி.சிவகுமாரன், துணைப் பொறுப்பாளர் ஜீவானந்தம் ஆகியோர் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பான கருத்துக்களை வழங்கினார்கள்.

இக்கருத்தூட்டல் நிகழ்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். பாதசாரிகள், சாரதிகள், துவிச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் வீதியைப் பாவிக்கும் முறை பற்றியும். விபத்தைத் தவிர்ப்பது எவ்வாறு என்பது தொடர்பாக ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு அறிவுறுத்தும் படியும் கூறப்பட்டது.

## பாண்ட் கருவிகளுக்கு பத்மநாதன் நிதியுதவி

(காரைதீவு நிருபர்)

பின்தங்கிய நாவிதன்வெளிக் கோட்டத்திலுள்ள 15ம் கிராமம் விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் பாண்ட வாத்திய கருவிகள் கொள்வனவு செய்ய அம்பாறை எம்.பி. க. பத்மநாதன் தனது வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். வித்தியாலய அதிபர் சாமித்தம்பி கிருபைராஜா விடுத்த வேண்டுகோளுக்கமைய இவ்வுதவி நல்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியச் சுடர்
மிதுனன்

## காலனுக்கு ஒரு கண்ணீர் மடல்...

காலனே காலத்தின் தூதனே
கண்டவர் கலங்கிடும் யமதூதனே
ஞாலனே ஞாலத்தின் முதல்வனே
நடு நிலை பாராத தீர்வானனே
பாலனே பாவத்தைப் பாராதவனே
பலர் அழுதும் கேளாத கூற்றுவனே
காலனே கவி எழுத வேலை உண்டு
காத்திடுவாய் பல காலம் அடியேனையே...

✡✡✡✡

சில மனிதர் முகமூடியைக் கிழிப்பதற்கும்
சீதனப் பேய் காதலித்துக் கேட்போருக்கும்
பல பெண்கள் கருவறையைச் சுவைப்போருக்கும்
பாவவினை செய்கின்ற ஆர்வலர்க்கும்
சில வரிகள் கவி எழுதித் தொடுப்பதற்கும்
சீறு வோர்க்கு அதன் பொருளை உரைப்பதற்கும்
பல காலம் யான் இருந்து வாழ்வதற்கு
பணிவுடனே கண்ணீர் மடல் வரைகின்றேனே....

✡✡✡✡

பகல் வேடம் பூணுகின்ற பாதகர்க்கும்
பாசாங்கு காட்டுகின்ற ஜாலகட்கும்
இகவாழ்வில் துறவி வேடம் போட்டுத் தானும்
இரவினிலே ஆடைகளைக் களட்டுவோர்க்கும்
சுகவாழ்வு பாராமல் நடித்துக் கோயில்
சுரண்டு வோரைக் கவி எழுதிச் சாடுதற்கும்
சுகமாக யான் இருந்து வாழ்வதற்கும் – நீ
நீண்டாயுன் தந் தென்னைக் காத்திடுவாயே...

✡✡✡✡

-இரத்தினம் தவராஜா,
தேற்றாத்தீவு-

## சரித்திரம் படைப்போம்

போதிமாதவனின்
போதனைகள்
கிளித் தெறியப்பட்டு....

✡✡✡✡

இனவாதக் கும்பல்களால்
தமிழ் கிராமங்கள்
அழித் தொழிக்கப்படாமல்
இருந்திருந்தால்
நாங்கள்
சொந்த நாட்டிலேயே
அகதிகள்
ஆகியிருக்க மாட்டோம்!

✡✡✡✡

இப்போது
லண்டன், சுவிஸ்,அவுஸ்திரேலியா,
கனடா, பிரான்ஸ்...
என்று
ஆளுக்கொரு அயல்நாட்டில்
அடைக்கலம்
தேடியிருக்க மாட்டோம்
உயிர் காக்க வேண்டி....!

✡✡✡✡

சொந்தங்களில் சாவு வாழ்வு
தந்தியிலும் போனிலும்
வீடியோ கெசட்டிலும் – விபரமாய்
கடிதத்திலும் தானிப் போது!

✡✡✡✡

எத்தனை ஆண்டுகளானாலும்
பிறந்து வளர்ந்த
மண்ணின் நினைவுகள்!
அதனால்...!
போர்க்கால இடைவேளையில்
வந்து போகிறோம்
சொந்த நாட்டிலே
விடுமுறை விருந்தினராய்!

✡✡✡✡

ஆனாலும்...
சென்ற நாட்டிலும்
செந்தமிழை வளர்க்கிறோம்
சஞ்சிகைகள் தொகுக்கிறோம்
ஈழ மண்ணின் மணம் மாறா
இலக்கியம் படைக்கிறோம்
சரித்திரம் படைப்போமென்று!

✡✡✡✡

திருமதி.லோகேஸ்வரி
கிருஷ்ணமூர்த்தி,
அக்கரைப்பற்று

# சங்ககால சமூகமும் இலக்கியமும்
# ஒரு மீள்பார்வை

**சென்றவாரத் தொடர்ச்சி.....**

மீண்டும் வேனிற்காலம் போய் மழைகாலம் தோன்றியதும் பாலை நிலம் மாற்றமடைந்து தன்னியல்பான குறிஞ்சி, முல்லை நிலமாகிவிடும். இதன்படி பாலை என்ற ஒரு நிலமில்லை. அது காலநிலை மாறுபட்டால் ஏற்படும் ஒரு நிலம் என்பது தெளிவாகின்றது.

பாலை என்ற மரம் இங்கு முக்கியமானது. (மட்டக்களப்பிலே பாலை மரம் உண்டு. சித்திரை மாதத்தில் பாலைப்பழம் இங்கு அதிகம்) பாலை மரம் பக்க வேர்களைக் கொண்டதல்ல. நீண்ட ஆணிவேரைக் கொண்டது. அதன் ஆணிவேர் மைல் கணக்கில் கீழே சென்று நிலத்தின் ஆழத்திலுள்ள அடி நீருடன் உறவாடும் தன்மை கொண்டது. எந்த வறட்சியும் பாலை மரத்தைப் பாதிக்காது. தாவரவியலுடன் இம்மரங்களை இணைத்துப் பார்க்கையில் தான் இத்தெளிவினை நாம் பெற்றுக் கொள்ள முடியும். நிலத்தை நான்காக வகுத்த தொல்காப்பியர் அந்நிலத்தில் வழங்கும் கருப்பொருள்களை தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் என்று பிரித்தார். இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நிலத்தினை உதாரணம் தந்தார். அத்தோடு கருப்பொருள்களுள் பூ, நீர், ஊர் என்பனவற்றையும் சேர்த்துக் கொண்டார்.

நிலங்களுக்குரிய ஊர் பற்றிக் கூறும் நச்சினார்க்கினியர் பின்வருமாறு கூறுவர்:

*குறிஞ்சி– ஊர்ப்பெயர் சிறுகுடி, குறிஞ்சி*
*முல்லை– ஊர்ப்பெயர் பாடி, சேரி*
*மருதம் – ஊர்ப்பெயர் ஊர்*
*நெய்தல்– ஊர்ப்பெயர் பட்டினம்,பாக்கம்*
*பாலை– ஊர்ப்பெயர் பறந்தலை*

இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள செய்தி (தொழில்) உணவு என்பனவும், பின்னாற் குறிப்பிடப்படும் ஊர் பற்றிய செய்திகளும் அரச அவதானத்திற்குரியன.

**நிலமும், தொழிலும், உணவும், வாழிடமும**

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தவர்கள் தேன் அழித்து, கிழங்கு அகன்று தினை விளைவிக்கின்றார்கள். அவர்களது உணவு ஐவன, நெல்லு, தினை, மூங்கிலரிசி என்று மிகப் புராதன உணவாக இருக்கின்றது. இவர்கள் உணவு தேடும் நிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் வாழும் இடம் சிறுகுடி, குறிஞ்சி என்று அழைக்கப்படுகின்றது. (குறிஞ்சி என்னும் பெயர் இன்று தாழ் நிலையிலுள்ளோர் இருக்கும் இடங்களுக்குப் பாவிக்கப்படுவது மனம் கொள்ளத்தக்கது) முல்லை நிலத்தில் வாழ்ந்தவர்கள் நிரை மேய்த்து வரகு முதலிய சிறு தானியங்களைச் செய்பவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் வேட்டையாடி கிழங்கு அகன்று உணவு தேடி வாழ்ந்த குறிஞ்சி மக்கள் அல்ல. உணவு உற்பத்தி செய்யும் நிலையில் இருக்கும் பொருளாதார வளர்ச்சி பெற்ற மக்கள் அவர்களின் உணவு வரகு, சாமை, முதிரை என்று உற்பத்தி செய்து, உண்ணும் உணவு வகைகளாக உள்ளன. அவர்கள் வாழும் இடம் பாடி என்றழைக்கப்படுகின்றது. இது குறிஞ்சியை விடச் சற்று வளர்ச்சி பெற்ற இடமாகக் காணப்படுகின்றது. (ஆயர்பாடி, பறையர்சேரி என்ற வழக்கு இன்றுமுண்டு.)

மருதநிலத்தில் வாழ்ந்தவர்கள் நடுதல், களைகட்டல், அரிதல் முதலிய தொழிலைச் செய்கின்றார்கள். இங்கு வேளாண்மைச் செயல் தொடங்கியிருக்கின்றது. நடுதலும், களைகட்டலும், வளர்ந்த பின்னர் அதனை அரிதலும் நடைபெறுகின்றன. இங்கு திட்டமிட்ட உணவு உற்பத்தி நடைபெறுகின்றது. இவர்கள் சாப்பிடுகின்ற உணவு செந்நெல்லும், வெண்நெல்லும் ஆகும். கிழங்கு அகன்று சாப்பிட்ட குறிஞ்சி மக்களை விட வரகு, சாமை, சாப்பிட முல்லை மக்களை விட, இவர்கள் வயிறார, வாயாரச் சாப்பிடும் வளர்ச்சியடைந்த மக்களாயுள்ளனர். இவர்கள் வாழ்ந்த இடம் ஊர் என்று அழைக்கப்படுகின்றது. நிலைபதியாக மக்கள் வாழும் இடமே ஊர் ஆகும். வேளாண்மை செய்ய ஆரம்பித்ததும் மந்தை மேய்த்துக் கொண்டு நாடோடியாகத் திரிந்த மக்கள் ஓரிடத்தில் இருந்து விடுதல் இயல்பு. மருதநில வளர்ச்சியுடன் தமிழர் வாழ்வும் நிலைத்து விடுகின்றது. தமிழர் நிலைத்து வாழ்ந்தமைக்கு அடையாளம் இது.

நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் மீன்பிடிக்கின்றார்கள். உப்பு விளைவிக்கின்றார்கள். அவர்கள் உணவு உப்பும், மீனும். தமிழர் உணவில் மீனும், உப்பும் சேர்ந்து விடுகின்றது. அவர்கள் கடலை வளமாக்கி உப்பும், மீனும் சேர்க்கும் மக்கள். கடலை வழியாக்கி கடல் வாணிபம் செய்த மக்களும் இங்கு வாழ்ந்தனர்.

ஏனைய நாட்டவர்களை கடற்கரை ஓரத்தில் இம்மக்கள் சந்தித்ததில் கலாசார பரிவர்த்தனை நிகழ்த்தியிருக்க வாய்ப்புண்டு. வாணிபம் இதனால் வளர்ச்சியுற்றது. வாணிப வளர்ச்சியும் செல்வப் பெருக்கும் நகர்ப்புறங்களைத் தோற்றுவிக்கும். நகரமே அரசரது தலைநகராகும். அதுவே அதிகாரத்தின் மையமும் ஆகும்.

இவர்கள் வாழும் இடம் பட்டினம் பாக்கம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

இந்நாநிலம் பற்றி மாத்திரமே தொல்காப்பியர் கூறினார். தொல்காப்பியர் இவை ஒவ்வொன்றையும் ஒரு உலகமெனக் கண்டார்.

**“மாயோன்மேய காடுறை உலகம்**
**சேயோன் மேய மைவரை உலகம்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகம்**
**வருணன் மேய பெருமணல் உலகம்”**

என ஒவ்வொரு நிலத் தொகுதியும் ஒவ்வொரு உலகமாகத்தான் அவருக்குத் தெரிகின்றது.

அவற்றுக்கு அவர் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனப் பெயரிடுகின்றார். அவர் தொல்காப்பியத்தை இயற்றியது மருதநில நாகரிகம் வளர்ச்சி பெற்றுவிட்ட காலப்பகுதியில் என்பதனை நாம் ம[illegible]ம் கொள்ள வேண்டும். அவர் கால[illegible]தில் அவர் பார்வையில் இந்நாநிலங்கள[illegible]வியியல் அடிப்படையில் தனித்தனி உலகங்களாகத் தான் இருந்தன.

பாலை நிலம் எவ்வாறு இலக்[illegible]ண மரபுக்குள் உள்வாங்கப்பட்டது என்று முன்னரேயே கூறப்பட்டுள்ளது. பாலை நிலத்தில் வாழ்ந்த மக்கள் களவெடுத்தலையே தமது தொழிலாகக் கொண்டுள்ளனர். நாட்டில் சனம் குறைந்த வரண்ட நிலை ஏற்பட்ட பின்னர் அப்பாலையினால் செல்லும் மக்களிடமிருந்து தான் இவர்கள் உணவைப் பறித்தெடுத்தனர். களவெடுத்தலில் கிடைத்த எல்லா உணவுகளும் இவர்களின் உணவுகளாயின. இவர்கள் வாழ்ந்த இடம் பறந்தலை என்றழைக்கப்பட்டது. தொல்காப்பியர் கி.பி.5ஆம் நூற்றாண்டில் தன் காலநிலையிலிருந்து சொன்ன சூத்திரத்திற்கு கி.பி.12இல் வாழ்ந்த நச்சினார்க்கினியர் மேற்கண்டவாறு விளக்கமளித்தார். உலக நாகரீகத்தில் வளர்ந்து வந்த வரலா றுகளுடன் இதனை ஒப்பிடுவதன் மூலம் நாமும் சில முடிவுகளுக்கு வரலாம்.

**-பேராசிரியர்.சி.மௌனகுரு-**

தொடரும்....

### நகைச்சுவைத் துணுக்கு



**மனைவி:-** ‘நம்ம பையனுக்கு நல்லா உறைக்கிற மாதிரி ‘நாலு வார்த்தை கேட்டேன்!”
**கணவன்:-** “உடனே அவன் என்ன பண்ணினான்?”
**மனைவி:-** “ஒரு போத்தல் சீனியையும் சாப்பிட்டிட்டான்”

**வே.தமருகா றொபட்**
**கல்லடி, வேலூர்**

# இலக்கியச் செய்தி

## “பிணம் செய்யும் சேதம்”
## நாளை லண்டனில் அறிமுகம்

இளைய அப்துல்லாஹ் எழுதிய கவிதைத் தொகுப்பு நூலான ‘பிணம் செய்யும் தேசம’ நாளை 13ஆம் திகதி சனிக்கிழமை லண்டனில் அறிமுகவிழா காண்கின்றது. பிரன்ட்டவுன் ஹோல் மண்டபத்தில் மாலை 4 முதல் 7.30 வரை இவ் விழா எஸ்.மகாலிங்கசிவத்தின் தலைமையில் நடைபெறும். நூல் வெளியீட்டுத் தொகுப்பை விமல்சொக்கநாதன் நடத்துவார். என்.தீபசுதன், நவஜோதி, யோகரெட்ணம், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் போன்றோர் கருத்துரை வழங்க, ஆசியுரையை புலவர் இளவாலை அமுதும், நன்றியுரையை பாரிஸ்டர் எஸ்.கே. ஜோ செவ்வும் வழங்குவர்.

## ஐரோப்பிய பாடகர் தெரிவுப் போட்டி நடுவராக என்.ரகுநாதன்

இலங்கையின் பிரபல தமிழ் மேடைப் பாடகரான ரகுநாதன் லண்டன் ஐ.பி.சி ஒலிபரப்பு சேவையின் அழைப்பை ஏற்று லண்டன் பயணமானார்.

அவ்வானொலி நடத்தும் இன்னிசைக் குரல் இசைப்போட்டியின் பிரதம நடுவராக கடமையாற்றும் பொருட்டே இவர் இப்பயணத்தை மேற்கொண்டுள்ளார். இப்போட்டி ஜேர்மனியில் 6ஆம் திகதியும், 14ஆம் திகதி சுவிட்சர்லாந்திலும், டிசம்பர் 30ஆம் திகதி பிரான்சிலும் டென்மார்க்கிலும் நடைபெறுவதற்கு ஏற்பாடாகி இருக்கின்றது. இறுதிச்சுற்று ஜனவரி 8ஆம் திகதி லண்டனில் நடைபெறும். இப்போட்டிகள் அனைத்திலும் பிரதம நடுவராக இவர் கடமையாற்றுவார்.

## தீபாவளித் திருநாள்

வாழ்வு வரும் திருநாளாம்
தீபாவளி எனும் ஒளிநாளாம்
காணக் கனநாள் காத்திருந்தோம்
கண்டு இந்நாள் உயிர்த்தெழுந்தோம்

கால காலமாய்எம்மினத்தார்
கோல விளக்கேற்றி கொண்டாடி
நேரிழையார் வளைக் கரம் பிடித்து
கமலக்கண்ணன் தாழ் பணிந்தோம்.

# பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் காலமானார் பிரிவுத் துயர் கேட்டு மக்கள் ஓரேசோகம்!



(ரமல்லா)

பலஸ்தீனய அதிபர் யசீர் அரபாத் காலமாகி விட்டதாக பலஸ்தீனிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். பலஸ்தீனா விடுதலைக்காக போராடி வந்த அரபாத் (வயது 75) பிரான்சில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் கடந்த சில நாட்களாக சிகிச்சை பெற்று வந்தார். கோமாவில் இருந்த அவர் உயிர் பரிஸ் நேரப்படி நேற்று அதிகாலை 03.30 மணிக்கு பிரிந்ததாக பலஸ்தீன அமைச்சர் சாயெப் எரகாட் அறிவித்தார்.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பிலிருந்து தங்கள் தாயகத்தை மீட்க பலஸ்தீனர்கள் கடந்த 30 ஆண்டுகளாக நடத்திவரும் விடுதலைப் போராட்டத்துக்கு தலைமையேற்று நடத்தி வந்தவர் யசீர்அரபாத். தாய்நாடு பெறுவதில் முழுமையான வெற்றியை நெருங்கியதற்கு முழுக் காரணமும் அவர்தான்.

நாடற்ற அகதிகளாக அங்கும் இங்குமாக வாழ்ந்த 40 லட்சம் பலஸ்தீனர்களுக்கு தாயகம் தந்த தலைவராகப் அவர் போற்றப்படுகின்றார்

கொரில்லாப் போர் வீரராக வாழ்க்கையைத் தொடங்கிய அரபா



த் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவராக மாறி இன்று உலகின் சிறந்த இராஜதந்திரிகளுள் ஒருவராகப் போற்றப்படுகின்றார். பலஸ்தீன விடுதலைப் போரின் வரலாறும் யசீர் அரபாத்தின் வரலாறும் ஒன்றுதான். 1929 ஒகஸ்ட் 4இல் கெய்ரோவில் அவர் பிறந்தாலும் அவரது குடும்பத்தின் பூர்வீக இடம் ஜெருசலேம் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் பிரதமரின் கஷ்மீர் பயணத்தில் மாற்றமில்லை

(புதுடெல்லி)

பிரதமர் மன்மோகன் சிங்கின் கஷ்மீர் பயணத் திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று பிரதமர் அலுவலகம் உறுதிப்படுத்தியது. வரும் 17, 18 திகதிகளில் கஷ்மீர் மாநிலப் பயணம் மேற்கொள்கின்றார் மன்மோகன். ஆனால், காஷ்மீர் பயணத் திட்டத்தைப் பிர தமர் தள்ளி வைத்துள்ளார் என்று மீடியாக்களில் செய்திகள்



வெளியாயின. இதை மறுத்த பிரதமர் அலுவலக அதிகாரிகள், திட்டமிட்ட திகதியில் கஷ்மீருக்குப் பிரதமர் பயணம் மேற்கொள்வார். அதில் எந்த மாற்றமும் இல்லை என்று மீண்டும் உறுதிப்படுத்தினர்.

## லயிட்ஸ் வங்கி அடுத்த ஆண்டில் இந்தியாவிற்கு மாற்றம்

(ரொய்ட்டர்)

பிரிட்டனின் புகழ் பெற்ற வங்கியான லயிட்ஸ் வங்கி அடுத்த அண்டின் இறுதிக்குள் 2500 பணி இடங்கள்வரை இந்தியாவிற்கு மாற்றவுள்ளதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தப் பணி இடங்களில் சில தகவல் தொழில்நுட்பத்து றையின் புதிதாக உருவாக்கப்படும் ஆனால் பிரிட்டனில் ஏற்கனவே உள்ள நிர்வாகத் துறை சார்ந்த பல பணி இடங்கள் இந்தியாவிற்கு மாற்றப்பட்டுவிடும் என அதிகாரி தெரிவித்தார்.

## தஞ்சாவூர் ரெயில்வே நிலையம் அருகே ரெயிலில் திடீர் தீ விபத்து

(தஞ்சாவூா)

தஞ்சை ரெயில்வே நிலையம் அருகே பயணிகள் ரெயிலில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

திருச்சியில் இருந்து தஞ்சைக்கு நேற்று முன் காலை 9. 50 மணிக்கு ரெயில் எண் 718 புறப்பட்டு வந்தது. ரெயிலில் மொத்தம் ஆறு பெட்டிகளில், 580 பயணிகள் இருந்தனர். காலை 11 மணிக்கு தஞ்சை ரெயில் நிலையத்தை வந்தடைய வேண்டிய ரெயில், 10. 50 மணிக்கு தஞ்சை சிவாஜி நகர் பகுதியில் உள்ள மேம்பாலத்தின் கீழ் வந்தது. ரெயில் நிலையம் செல்ல 200 மீற்றர் உள்ள நிலையில் ரெயிலின் 4ஆவது பெட்டியில் மின் கசிவு காரணமாக திடீரென தீப்பிடித்தது. இப் பெட்டியில் இருந்த வர்கள் கூச்சலிட்டதுடன், அபாயச் சங்கிலியை பிடித்து இழுத்தனர். உடனடியாக ரயில் நின்றது. அனைத்து பயணிகளும் பாதுகாப்பாக கீழே இறங்கினர்.

ரெயில் பெட்டியில் இருந்த டி.சி.பி., எனப்படும் டிரை கெமிக்கல் பவுடரை கொண்டு ரெயிலில் வந்த ரயில்வே ஊழியர்கள் தீயை அணைத்தனர். ரெயில் புகையை கவனித்த ரெயில் நிலைய ஊழியர்கள் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர். தீயணைப்பு உதவி இயக்குனர் ஜெயபால் தலைமையில் வந்த வீரர்கள் பெட்டியில் இருந்த தீயை முழுமையாக அணைத்தது, வயர்களின் இணைப்பை துண்டித்தனர். இச்சம்பவத்தால் 20 நிமிடங்கள் ரெயில் போக்குவரத்து தடைபட்டது. நீண்ட பரிசோதனைக்கு பின் ரெயில் நிலையத்துக்கு ரயில் புறப்பட்டு சென்றது.

# உலக செய்திகள்

## ஜெயலலிதா மீதான வழக்கு டிசம்பரில் விசாரனைக்கு உட்படுத்தப்படும்.



(பெங்களூர்)

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது போடப்பட்டுள்ள வருமானத்திற்கு மீறி சொத்து சேர்த்த வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றில் டிசம்பர் இரண்டாவது வாரத்தில் விசாரணை தொடங்குகின்றது.

ஜெயலலிதா சொத்து குவிப்பு சம்பந்தமான வழக்கு ஆவணங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் இருப்பதால் அவைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் பணி செப்டெம்பர் 25 முதல் மிக மும்முரமாக நடந்து வருகின்றது. மொழிபெயர்க்கும் பணி அரச ஆர்.சி., வணிகக் கல்லூரி தமிழ்த் துறை பேராசிரியர் சீனிவாசன் தலைமையில் 24 தமிழ், ஆங்கிலம் அறிந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மொழி பெயர்த்து வருகின்றனர்.

10 ஆயிரம் பக்கங்கள் அடங்கிய தமிழ் ஆவணங்களை இதுவரை நான்கில் மூன்று பகுதி ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் பணி பூர்த்தியாகி விட்டது.

நவம்பர் 25இற்குள் மொழி பெயர்ப்பு வேலைகளை முடித்து விடவேண்டும் என்று திட்டமிடப்பட்டது. ஆனால் இடையில் தீபாவளி, ரம்ழான் பண்டிகை விடுமுறை தொடர்ந்து வந்துவிட்டதால், மொழி பெயர்ப்பை முடிப்பதில் காலதாமதமாகி விட்டது.


தமிழில் இருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதற்கு பக்கத்திற்கு 25 ரூபாய் வீதம் மொழி பெயர்ப்பாளர்களுக்கு கௌரவ ஊதியம் அளிப்பது என்ற அடிப்படையில் 24 பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்லூரி விடுமுறை நாட்களிலும் அவர்கள் வந்து மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 30இற்குள் தமிழிலுள்ள அனைத்து ஆவணங்களும், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு விடும்.

## பலூஜா நகரம் அமெரிக்க படையினர் கட்டுப்பாட்டில் வீழ்ந்தது

(பக்தாத்)

சென்றவாரம் திங்கள் அதிகாலையில் ஆரம்பிக்கப்பட்ட பலூஜா நகரைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையின் ஐந்தாவது நாளான நேற்று பலூஜாவின் 90 சதவிகிதமான இடத்தை அமெரிக்க மற்றும் ஈராக்கியக் கூட்டுப் படையினர் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாகத் தெரியவருகின்றது. தொடர்ச்சியாக பலூஜாவின் மேற்குப் பக்கமாக முதலில் ஆரம்பிக்கப்பட்ட தீவிரமான தாக்குதல் தற்சமயம் முடிவுக்கு வந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 60 நாட்கள் தொடர்ச்சியான அவசர காலநிலை பிரகடனப்படுத்தி அடுத்த ஒரு மணித்தியாலயத்துக்குள் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி பலூஜாவை நோக்கிய தாக்குதல்களில் சேத விபரங்கள் பற்றி எதுவும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட



வில்லை. இதே நேரம் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவியினுடைய நெருங்கிய உறவினர் களை தீவிரவாதிகள் கடத்திக் கொ ண்டு போய் விட்டதாகவும் தாக்குதல் நிறுத்தப்படாது விட்டால் கடத்தப் பட்டவர்களைக் கொன்றுவிடப் போவதாகவும் எச்சரித்திருக்கின்றார்கள். இதே நேரம் அமெரிக்கக் கூட்டுப்படைத் தரப்பில் இருந்து வெளியான செய்தியில், அல்-சக்குவாய் பயங்கரவாதிகளின் உண்மையான தங்குமிடத்தை தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் இங்கு தான் பணயக் கைதிகள் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறியிருப்பதுடன் கடத்தப்பட்டிருபோரின் பெயர்களை தங்கள் ஒரு பட்டியலில் கண்டுபிடித்துள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றார்கள்.

மேலும் இன்று பிற்பகலுக்கு முன் பலூஜாவை முற்று முழுதாகக் கைப்பற்றிவிடுவோமென அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளாதாகச் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.



ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்த அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் முன்னாள் போராளிகளுக்கான பயிற்சிக் கூடத்திற்கு விஜயம் செய்து பயிற்சி வழங்கப்படும் முறைகளைப் பார்வையிட்டுச் சென்றபோது பிடிக்கப்பட்ட படம்.

## பர்மாவில் மூன்று இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு சிறைத்தண்டனை

(ராய்ட்டர்)

பர்மாவில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் மூவருக்கு 22 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கடந்த மாதம் எதிர்பாராத வகையில் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட தளபதி கில் றியூன்டின் ஆட்சிக்கு பக்கச்சார்பாக இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர். வர்மாவின் புதிய ஆட்சியினர் நடத்தும் இராணுவக் களையெடுப்பின் பகுதியாக இந்தத் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

# ஆஸி அணி சகல துறைகளிலும் மிகச் சிறப்பாக விளையாடியது

**-ரவிசாஸ்திரி-**

(மும்பை)

மும்பை போட்டியில் இந்தியாவுக்குக் கிடைத்த வெற்றி மகிழ்ச்சிதான். ஆனால், கிரிக்கெட் விமர்சகர்கள் பார்வையில், அதிர்ஷ்டம் இந்தியாவின் பக்கம் இருந்தது என்பதை மறுக்க முடியாது. இதுபோன்ற சுழல் ஆடுகளங்கள் அமைத்தால், ஐந்து நாட்களில் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கூட நடத்தி முடித்து விடமுடியும்.

அவுஸ்ரேலிய அணி 2-1 என்ற முன்னிலையில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிச் சென்று விட்டது. சென்னை டெஸ்டின் கடைசி நாள் ஆட்டம் மழையால் பாதிக்காமல் இருந்திருந்தால், இந்த முடிவு வேறு விதமாகக் கூட இருந்திருக்கலாம். ஆனால், அதுப்பற்றி உறுதியாக எதுவும் சொல்லமுடியாது. இந்தத் தொடரில் அவுஸ்ரேலிய அணி சகல விதங்களிலும் நம்மை விடச் சிறப்பாக விளையாடியது என்பதை மறுக்க முடியாது. தோல்வியில் முடிந்தாலும், நமக்குச் சில நம்பிக்கையான செய்திகளை இந்தத் தொடர் விட்டுச் சென்றிருக்கிறது. முதலாவது, ஜாகிர்கான். காயம், உடல் நலக்குறைவு என, இந்தத் தொடர் முழுவதும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சிறப்பாகப் பந்து வீசினார். அவரது பந்து வீச்சில் பிரமாதமான உற்சாகம் தெரிகிறது. கூட இர்பானும் இணைந்து விட்டால், நமது வேகப்பந்து வீச்சு தனிப்பலம் பெற்றுவிடும்.

அடுத்ததாக, நமது சுழற்பந்து வீச்சாளர்கள். அனில் கும்ளே பற்றிச் சொல்லவே வேண்டாம். நமது பல வெற்றிகளில் அவர் பங்கெடுத்திருக்கிறார். ஹர்பஜன், முரளி கார்த்திக் இருவருக்கும் இது சிறப்பான தொடர். இனி, மூன்று சுழற்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கும் துணிச்சல் தலைவருக்கு வரலாம்.

மொத்தத்தில் அருமையான தொடர். மைக்கேல் கிளார்க் என்ற இளம் வீரர் இந்தத் தொடரின் கண்டுபிடிப்பு. என்னைப் பொறுத்த வரை, இந்தத் தொடரின் நிஜமான ''தொடர் நாயகன்'' அவர்தான். ''அனுபவ'' மார்ட்டினை விட அவரது துடுப்பாட்டம் அருமை. இக்கட்டான தருணத்தில் பந்து வீச்சிலும் கலக்கினார் கிளார்க். அவுஸ்ரேலிய அணியில் அவருக்கு மிகச்சிறந்த எதிர்காலம் இருக்கிறது. யாருக்குத் தெரியும்? எதிர்காலத்தில் அந்த அணியின் தலைமைப் பொறுப்புக் கூட அவரைத் தேடி வரலாம்!




# களுவிதாரன கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர், அதிரடி துடுப்பாட்ட வீரர் ரொமேஷ் களுவிதாரன சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து இவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

தற்போது 34 வயதான இவர் 1990ல் இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் அறிமுகமானார். இரண்டு ஆண்டுகள் கழித்து அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இடம் பெற்றார். முதல் டெஸ்டிலேயே சதம் அடித்து தனது துடுப்பாட்ட திறனை வெளிப்படுத்தினார்.

கடந்த 1996, உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிதான் இவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றது. இவரும் ஜெயசூர்யாவும் சேர்ந்து துவக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கி அதிரடியாக ஓட்டங்களை சேர்த்தனர்.

இவர்களது இந்தக் தாக்குதல் ஆட்டமே அணி கிண்ணத்தை பெற முக்கிய காரணமாக அமைந்தது.





அம்பாறையில் நடைபெற்ற பல்கலைக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற அணியினையும், அவர்கள் பெற்ற தங்கப்பதக்கத்துடன், உடற்கல்வித்துறை பொறுப்பாளர் எம்.எல்.வை.சம்சுல் ஆரிபின், உதைபந்தாட்டப் பொறுப்பாளர் எம்.எல்.ஏ.தாஹிர், மெய்வல்லுனர் பயிற்சியாளர் ஏ.வி.எம்.மஃதூம் ஆகியோருடன் காணப்படுகின்றனர். (படமும், தகவலும்: விரி.சகாதேவராஜா)

## ஏங்கள் குரல்

# மயான வீதியை புனரமைத்து தாருங்கள்

கோட்டைக் கல்லாறு மயானத்துக்குச் செல்லும் பாதை ஏற்கனவே திட்டமிட்டபடி இதுவரை திருத்தியமைக்கப்படாமல் உள்ளது. இதனால் கிராமத்தில் ஒருவர் உயிரிழந்தால் உயிரிழந்தவரை கொண்டு செல்வதில் மக்கள் பலத்த சிரமங்களுக்கு உள்ளாக வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இவ்வீதியைப் புனர் நிர்மானம் செய்து தருமாறு ஈழநாதம் எங்கள் குரல் ஊடாக அறியத் தருகின்றோம்.

**என்.கிருபாகரன்**
**கோட்டைக்கல்லாறு**

# தம்பிலுவில் வித்தியாலயத்திற்கு நிரந்தர நூலகக் கட்டடம் வேண்டும்

தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய பாடசாலைக் கட்டடத்தில் இடவசதியற்ற ஒரு அறையில் நூலகம் இயங்குகின்றது. இதனால் மாணவர்கள் ஒன்றாக அமர்ந்திருந்து நூல்களை வாசிக்க முடியாது திண்டாடுகின்றனர். இதனால் இம் மாணவர்களின் வாசிப்புத் திறன் மழுங்கடிக்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இம்மாணவர்கள் மேலும் தெரிவிக்கையில் குறித்த அதிகாரிகள் எங்கள் இந்த அவல நிலையைக் கருத்தில் கொண்டு எமது பாடசாலைக்கு என நிரந்தர நூலகக் கட்டடம் ஒன்றினை அமைப்பதற்குரிய உதவியை நல்கி மேலும் புதிய நூல்களை வழங்கி தங்களின் வாசிப்புத் திறனை மேன்படுத்த உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

**பு.சீலன்**
**தம்பிலுவில்,**

# காலாவதியான உணவுகள் விற்பனையாவதை சுகாதாரப் பரிசோதகர் கவனிக்க வேண்டும்

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மக்களுக்கு வழங்கிக் கொண்டுவரும் நோய்த்தடுப்பு மருந்துகள் எவ்வித பயனும் இல்லாத நிலையில் உள்ளது. நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்கும் போது அதன் விதிமுறைகளுக்கு ஏற்ப வழங்கப்படுவதில்லை என இப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

குறிப்பாக திருக்கோவில் பாலைக்குடாவில் கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பு வழங்கப்பட்ட சின்னமுத்து நோய்க்கெதிரான தடைமருந்து (Rubella). குளிர்ச்சங்கிலி (Cold Chain) இல்லாமல் தடுப்பூசியாக வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த ஊசி மருந்தை குளிர்ச்சங்கிலி இல்லாமல் வழங்குவதால் ஒருவிதம் பிரயோசனமும் இல்லை. இவ்விடயமாக மக்கள் பெரிதும் சுகாதாரப் பரிசோதகருக்கு முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் தம்பிலுவில், திருக்கோவில் விநாயகபுரம், தம்பட்டை ஆகிய இடங்களிலுள்ள சாப்பாட்டுக் கடைகளில் காலாவதியான உணவுகள் தொடர்ந்தும் விற்கப்பட்டும் வருகின்றது. இதனால் மக்கள் தொற்று நோய்களுக்கு உட்படுகின்றனர். மேற்குறித்த விடயங்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கவனமெடுத்து இத்தகைய அநீதிகளை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

**தருமினி**
**பாலைக்குடா**

# சது, வாணி வித்தியாலயத்தில் அடிப்படை வசதியின்றி அவதி

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளிக் கல்விக் கோட்டத்திலுள்ள 04 ஆம் கிராமம் வேப்பயடித்தோட்ட சது/வாணி வித்தியாலயம் நீண்ட காலமாக எவ்வித அபிவிருத்தியும் இன்றி கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

1953 ஆம் ஆண்டு கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டதே இப்பாடசாலை. இதில் சுமார் 500ற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 50 வருடங்களுக்கு மேலாக அமைக்கப்பட்ட வகுப்பறைகளிலையே தற்போது வரைக்கும் கற்றல், கற்பித்தல் செயற்பாடு இடம் பெறுகின்றது.

இதுவரையில் அரசாங்கத்தினால் எவ்வித அபிவிருத்தித் திட்டங்களும் இப்பாடசாலைக்கென நடைபெறவில்லையென பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், மாணவர்களின் பெற்றோரும் விசனமடைந்துள்ளனர்.

மாணவர்களின் தொகை அதிகளவு காணப்படுவதால் வகுப்பறைகள் இல்லாமல் மாணவர்கள் மரங்களுக்குக் கீழே கல்வி கற்கின்றனர்.

ஆனால் தற்போது பெய்து வரும் அடைமழையினால் இம்மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றது. வெளியில் தான் அடைமழை என்றால் வகுப்பறையும் அதேபோல்தான் இருக்கின்றது. வகுப்பறை கூரை ஓடுகள் உடைந்து வகுப்பறைகளுள் மழைநீர் நிரம்பிக் காணப்படுகின்றது. இதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரிதும் அவஸ்தைப்படுகின்றனர்.

மேலும் வகுப்பறைக் கட்டடங்கள் வெடிப்புக்களுடனும் நிலத்தரையும் இடிந்து காணப்படுகின்றது. பலத்த காற்று அடிக்கும் நிலையில் கட்டடங்கள் இடிந்து விழும் அபாயகரமான நிலையில் மாணவர்கள் மிகவும் அச்சத்துடன் கல்வி கற்கின்ற நிலைமையும் இங்கு காணப்படுகின்றது. அடுத்து இப்பாடசாலைக்கு சுற்றுவேலியும் இல்லை.

இதனால் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதுடன் இங்கு நடப்பட்டுள்ள பூ மரங்களையும் சேதப்படுத்துவதுடன் பாடசாலைச் சுற்றாடலும் மாசடைந்துள்ளது.

இந்தப் பாடசாலையின் நிலை பற்றி பாடசாலை அதிபர் பல முறை மாகாணக் கல்வியமைச்சுக்கும், வலயக் கல்விப் பொறுப்பாளருக்கும் தெரியப்படுத்தியதோடு, அரசசார்பற்ற நிறுவனங்களின் கவனத்திற்கு தெரியப்படுத்தியும் எதுவித பிரயோசனமும் கிடைக்கவில்லை.

எனவே இப்பாடசாலை அதிகஷ்டப் பிரதேசத்திற்குள் காணப்படுவதால் தயவு செய்து மேற்குறிப்பிட்ட அதிகாரிகள் இப்பாடசாலையை புனரமைப்புச் செய்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஈழநாதமூடாக மாணவர்களின் பெற்றோரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் கோரிக்கை விடுக்கின்றனர்.

**அ.தர்மா**



## சிந்தனைக்கு!

நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம்., அதற்கு எமது வீரர்கள் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு
பிரதான வீதி, கொக்கட்டிச்சேலை.
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
தொலைபேசி : 065-2226110
தொலைநகல் : 065-2226303
12-11-2004



மாவீரர் தினத்தை முன்னிட்டு மட்டு அம்பாறை மருத்துவப் பிரிவினரால் கரடியனாறு மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட மருத்துவ சேவையின் போது எடுக்கப்பட்ட படம். (படம்- சசிவரதன்)

# மாணவர் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் மகாவித்தியாலய மாணவர்கள் மீது புதன்கிழமை சிறிலங்கா பொலிசார் நடத்திய தாக்குதல் கண்டிக்கத்தக்கதாகும்.

அகிம்சை வழியில் தமது பாடசாலையின் கல்விசார் நலனுக்காக நடத்தப்பட்ட இந்த போராட்டத்தின் போது பொலிசார் குண்டாந் தடிப்பிரயோகம் செய்து மோசமான தாக்குதல் நடத்தியிருப்பது பாரதூரமான குற்றமாகும். இந்தச் சம்பவத்தில் 23 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். ஒரு மாணவன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார். தாக்குதலில் மாணவர்கள் மட்டுமன்றி மாணவிகளும் தாக்கு தலுக்கு இலக்கானது பாரதூரமான குற்றம்.

கடந்த ஒக்டோபர் மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த அகிம்சைவழிப் போராட்டமொன்றின் போது ஆரையம்பதியில் வைத்து மாணவர்கள் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தனர். நாளைய தலைமுறையின் தலைவர்களாக வர வேண்டிய இன்றைய கல்விச் சமூகம் தமது கற்றல் செயற்பாடுகளில் இராணுவ அச்சுறுத்தல் ஏற்படுமானால் அவர்கள் சுதந்திரமாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். அத்துடன் உளவியல் ரீதியான பாதிப்புக்களையும் உருவாக்கும்.

கடந்த போர்க்காலச் சூழலில் தமிழர் தாயகத்தின் கல்வி சிதைக்கப்பட்டன. பாடசாலைகள் படைமுகாம்களாக மா றின. விமானக் குண்டு வீச்சு எறிகணைத் தாக்குதல் என தமிழர் தாயகத்தில் கல்விக் கூடங்கள் அழிக்கப்பட்டன. பல கோரத் தாக்குதல்களில் புத்தகப் பைகளுடன் மாணவர்கள் குற்றுயிராய்க் கிடந்தனர். யாழ் மாணவி கிருசாந்தி மோசமான முறையில் சிறிலங்காப் படையினரால் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

உளவாளிகள் எனக் கூறி தமிழ் மாணவர்களை விலங்கிட்டு அடைத்து சித்திரவதைப்படுத்தினர். சிறிலங்கா அரசுகளின் மிக மோசமான நடவடிக்கைகளை தாங்க முடியாது மாணவர் சமூகமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைய வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனினும் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள் தமிழர் தாயகத்தின் கல்வியில் அதீத அக்கறை காட்டினார்.

"எமது விடுதலைப் போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பது போல் கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும" என்பதைப் பகிர்ந்த அவர் அதனை மிகவும் ஆழமாகச் செம்மைப்படுத்திருந்தார். குப்பி விளக்குக் கூட இன்றி மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்த போது அவர்களது கல்விக்கு விடுதலைப் போராட்டம் காப்பரணாக இருந்தது என்பது கடந்த விடுதலைப் போராட்டத்தில் நாம் கண்ட யதார்த்தம்.

தற்போது போர் ஓய்வு நிலையில் எமது தமிழீழ கல்வி வளர்ச்சிப் போக்கு அடைய வேண்டியது அவசியம். போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட கல்வியை புனரமைத்து வளமாக்க வேண்டும்.

இதேவேளை மாணவர்கள் அகிம்சை வழியில் நடத்தும் போராட்டங்களுக்கு சிங்களப் படைகள் ஆயுத அச்சுறுத்தல் விடுத்து அடிதடி பிரயோகம் மேற்கொண்டு மாணவர் சமூகத்தின் உணர்வுகளை அடக்க நினைப்பது இந்த அரசின் சர்வாதிகாரத் தன்மையையே வெளிப்படுத்துகின்றது. இவ்விடயம் குறித்து கல்விச் சமூகம் பாரதூரமான கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

அன்று ஆரையம்பதி நேற்று ஏறாவூர் நாளை எங்கே என்ற கேள்விக்குறி மாணவர் சமூகத்தினரிடையே எழாமல், மாணவர் சமூகத்தில் ஆயுதப் படைகள் கைவைக்கும் கலாசாரத்தை நிறுத்த வேண்டும்.

எனவே ஏறாவூரில் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக கல்விச் சமூகம் ஆழமாகச் சிந்தித்து அரசுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்ப வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

# சாரணன் பிறருக்கு உதவுவதில் எப்போதும் பின் நிற்கமாட்டான்

(முபா)

**சாரணன் எதற்கும் தயா ராக இருப்பவன். அவன் பிறருக்கு உதவுவதில் எப்போதும் பின் நிற்க மாட்டான். மற்றவரை இம்சைப் படுத்தவும் மாட்டான். மகிமை பொருந்திய இச்சாரணியத்தின் ஊடாக சிறந்த பண்புகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.**

இவ்வாறு கல்முனை வெஸ்லி கல்லூரியில் இடம் பெற்ற ஒரு நாள் சாரணர் பயிற்சி முகாமில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அதிபர் பொன் முருகையா குறிப்பிட்டார்.

சாரணிய ஆசிரியர் எஸ். லோகநாதன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் 150 சாரணர்களும், பெண் வழிகாட்டிகளும் பங்கு பற்றினர்.

பயிற்சிப் பொறுப்பாளராக உதவி மாவட்ட சாரணிய ஆணையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா கலந்து கொண்டார்.

வெஸ்லி நல்லதம்பி மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெண் வழிகாட்டித் தலைவர்களான திருமதி என். கிருபைராஜா, திருமதி இராசநாயகம், செல்வி எஸ். கீர்த்தினி, சாரணிய தலைவர்களான பிரதி அதிபர் எம். தங்கவேல், உதவி மாவட்ட ஆணையாளர் எம். வேலாயுதம், ஏ.சி.எம். மாகிர், எம். சத்தியன், எஸ்.லோகிதராஜா உட்பட பலரும் பங்கு பற்றி சிறப்பித்தனர்.

## ஹிங்குராக்கொட பகுதியில் கொள்ளைக் கோஷ்டியினர் கைது

(ஏறாவூர் நிருபர்)

பொலநறுவை ஹிங்குராகொட பிரதேசத்தில் நேற்று கொள்ளைக் கோஷ்டி ஒன்றை பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களிடம் 50 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் கைப்பற்றப்பட்டதோடு மின்சார உபகரணங்களும், இலத்திரனியல் கருவிகள் மற்றும் சைக்கிள்கள் என்பன இவற்றுள் அடங்கும்.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் சமீப நாட்களாக பொலநறுவை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்றுள்ள கொள்ளைச் சம்பவங்களில் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸ் விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

## மட் மாவட்டத்தில் இறால் பண்ணையாளர்கள் பாதிப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக பல கோடி ரூபா நஷ்டத்தினை எதிர் கொண்டுள்ளதாக இறால் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காரணமாக இறால் பண்ணை உடைப்பெடுத்து இறால்கள் வாவியுடன் சங்கமமாகியுள்ளன. இதனால் இறால் பண்ணையாளர்கள் பெரும் நஷ்டத்தை எதிர் கொண்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தேசிய நீர் வழங்கல் அபிவிருத்தி அதிகாரி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 400 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 67 இறால் பண்ணைகள் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

இறால் பண்ணைகளில் நீர் நிறைந்து உடைப்பெடுத்ததனாலேயே இவ்வாறு பாரிய நஷ்டத்தினை உற்பத்தியாளர்கள் எதிர் கொண்டுள்ளனர். இதற்கான நிவாரணம் வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இடை விலகிய 77 மாணவர்கள் சேர்ப்பு

(கர்சனன்)

ஏறாவூர் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவில் அதிக இடை விலகிய மாணவர்களைச் சேர்த்ததற்காக ஈரளக்குளம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. கருணாநிதிக்கு 2500 ரூபாவுக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் 100 பேர் இடை விலகிய மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 77 பேர் ஈரளக் குளம் கிராம சேவகர் பிரிவில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறையில் அமைதியான தீபாவளிக் கொண்டாட்டம்

(வி.ரி.சகாதேவராசா)

அம்பாறை மாவட்டத்தில் தீபாவளிப் பண்டிகை அமைதியான முறையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. நேற்று அதிகாலையில் பலத்த மழை பொழிந்த போதிலும் பின்பு வானம் நிர்மலமாகியது.

பகலில் மழையில்லை இந்துக்கள் ஆலய தரிசனம் செய்து உற்றார் உறவினர்கள் வீடுகளுக்கும் விஜயம் செய்தனர். என்று எமது காரைதீவு நிருபர் தெரிவிக்கின்றார்.

இந்துக்கள் புத்தாடை தரித்து உறவுகளைப் புதுப்பிக்கும் கருமங்களில் ஈடுபட்டதோடு விருந்தும் பரிமாறினர். தொலைக்காட்சி தீபாவளி நிகழ்ச்சிகள் பெரும்பாலான மக்களை ஆக்கிரமித்துக் கொண்டதென்பதைச் சுட்டிக்காட்டலாம். ஆங்காங்கு தீபாவளியை ஒட்டிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

மக்கள் வங்கியின் தீபாவளி பிரதான அம்பாறை மாவட்ட விழா நேற்று காரைதீவு மக்கள் வங்கிக் கிளையில் காலை 7.50 மணியளவில் வங்கி முகாமையாளர் ஜே. கே.பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது. கொழும்பிலிருந்து மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.ஜி.சிறிசேன பண்டா, அம்பாறைப் பிராந்திய முகாமையாளர் பி.மலலகம, பதுளைப் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் சி.தர்மரத்தின ஆகிய உயரதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.

கண்ணகை அம்மனாலய தர்மகர்த்தா சா. கங்காதரன், பிரமுகர் பி. சந்திரமோகன் உள்ளிட்ட வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக் குருக்கள் பூசை நடாத்தினார். பின்பு ஆலயடிவேம்பில் வங்கிக்கிளை திறந்து வைக்கப்பட்டது.

## இலங்கைக்கு அபுதாபியிலிருந்து பேரீச்சம் பழங்கள்

(வி.ரி.சகாதேவராசா)

புனித ரமழான் நோன்பு காலத்தை முன்னிட்டு அபுதாபியிலிருந்து 100 மெட்ரிக்தொன் பேரீச்சம் பழங்கள் இலங்கைக்குத் தருவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக சவூதி அரேபியாவிலிருந்து பேரீச்சைப் பழங்கள் இலங்கைக்கு கிடைப்பது வழக்கம். ஆனால் இம்முறை அங்குள்ள காலநிலை காரணமாக பேரீச்சைப் பழங்கள் வரவில்லை.

இதனைக் கண்ணுற்ற கிழக்கு உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் குளோபல் ஏசியா நிறுவனத்துடன் கலந்துரையாடலை நடாத்தினார்.

அதற்கமைய அபுதாவியிலிருந்து கடந்த வாரம் 100 மெட்ரிக் தொன் பேரீச்சைப் பழங்கள் இலங்கை வந்து சேர்ந்தன.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# ஈழத்தமிழர் நலன்களுக்கு எதிராக இந்தியா ஒருபோதும் செயற்படாது

(நமது நிருபர்)

ஈழத் தமிழர்களின் நலன்களுக்கு எதிராக இந்தியா செயற்படாதென இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துமென்று இந்திய ஆளும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோபலசாமி தெரிவித்த முறைப்பாடு தொடர்பாக கருத்து வெளியிடும் போதே இந்திய பிரதமர் இக்கருத்தை தெரிவித்துள்ளார். இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடர வேண்டுமென்பதில் இந்தியா உறுதியாக இருப்பதாகவும், இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தினால் சமாதான முயற்சிகள் பாதிப்படைவதற்கு தாம் இடமளிக்க போவதில்லையென்றும் பிரதமர் உறுதியளித்துள்ளதாக வைகோ தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் வைகோ இந்திய பிரதமருடன் இவ்விடயம் தொடர்பாக அரை மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது

## அட்டாளைச் சேனையில் ஆற்றுவாழை அகற்றும்பணி

(அட்டாளைச்சேனை நிருபர்)

அண்மையில் பெய்த மழை காரணமாக அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாயக் காணிகள் வெள்ளத்தில் மூழ்கின.

தற்போது மழை நின்றுவிட்டாலும் அட்டாளைச்சேனையிலுள்ள சிறிய பாலத்தினை ஆற்றுவாழைகள் அடைத்துள்ளமையினால் நீர் ஓட்டம் தடைப்பட்டுக் காணப்படுகின்றது.

இதனை அட்டாளைச்சேனை பிரதேச விவசாயிகள் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பிற்கு முறையீடு செய்ததைத் தொடர்ந்து, அமைச்சர் அவர்களது பணிப்புரையின் பேரில் அட்டாளைச்சேனை ஆற்றுப் பகுதியில் நிரம்பிக்காணப்படும் ஆற்றுவாழைகளை அப்புறப் படுத்தி துப்பரவு செய்யப்பட்டு வருகின்றது.

## நூலக வாரம்

(தனஞ்சயன்)

அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இன்று நூலக வார நிகழ்வு இடம்பெறவுள்ளதாக பாடசாலையின் பிரதி அதிபர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் இப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நாடகம், பேச்சு, கவிதை போன்ற பல சுவாரசியமான ஆசிரியர் மாணவர்களின் சிந்தனையில் உதயமான நிகழ்ச்சிகள் என்பன நடைபெறவுள்ளது.

---

**(தேசியத் தலைவரை...)**

புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இச் சந்திப்பில் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிர



பாகரனுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் ஆகியோரும், நோர்வே தரப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சன், துணை வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

இச்சந்திப்பின் பின்பு நோர்வே பிரதிநிதிகள் எவரும் செய்தியாளர்களை சந்திக்க மறுத்துவிட்டனர். விடுதலைப் புலிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலாநிதி அன்டன் பாலசிங்கம் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் எதிர்பார்க்கப்பட்டபடி சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க புதிதாக எந்தவொரு செய்தியையும் தமக்கு அனுப்பி வைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

சந்திரிகாவினால் புதிதாக ஒரு செய்தி அனுப்பி வைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் புதிதாக எந்த செய்தியும் தெரிவிக்கப்படவில்லை. அவர் தன் பழைய நிலைப்பாட்டையே சொல்லியனுப்பியுள்ளார். எந்த இடைக்கால தீர்வுத் திட்டமும் ஒட்டுமொத்தமான நிரந்தரத் தீர்வின் ஒரு இணைபிரியாத அங்கமாக அமையப்பெறவேண்டும் என்ற கருத்தையே சந்திரிகா நோர்வே தரப்பினரிடம் சொல்லி அனுப்பியுள்ளார். அது தொடர்பாக இன்று நீண்ட நேரம் பேசப்பட்டது. இறுதியாக நாம் ஒரு செய்தியை சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ளோம்.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன, இப் பேச்சுவார்த்தைகளில் ஏன் விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வலியுறுத்தி வருகின்றனர். என்பது தொடர்பாகவும் இதனை நிரந்தர தீர்வுடன் இணைத் துப்பேச ஏன் விரும்பவில்லை என்ற விடயங்களும் இன்று விரிவாக எடுத்துரைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நிரந்தர தீர்வு பற்றி 50 ஆண்டுகளாகப் பேசி வருகின்றோம். எத்தனையோ வடிவங்களில் பேசியுள்ளோம். சமஷ்டி பற்றி பேசுவதெல்லாம் புதிய விடயம் இல்லை. 50 ஆண்டுகளுக்கு முன்பே இப்பிரச்சினை எடுக்கப்பட்டது.

போர் நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்து 2 வருடங்களுக்கு மேலாகி விட்ட போதிலும் சிறிலங்கா அரச படை இதனை உரியமுறையில் கடைப்பிடிப்பதாக இல்லை. அரசாங்க கட்டடங்களிலும் பொது இடங்களிலும், எமது மக்கள் குடியிருப்புகளிலும் சிறிலங்காவின் பல்வேறு பாதுகாப்புப் படைக் குழுவினர் தொடர்ந்தும் தங்கியிருக்கின்றார்கள். பேச்சுவார்த்தைக்கான அழைப்பை ஜனாதிபதி விடுத்திருக்கின்றார். ஆனால் அதற்கான சூழ்நிலை ஒன்று உருவாக்கப்பட்டு வந்தாலும் அதற்கு முன் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். பல்வேறு வடிவங்களில் தீர்வுத்திட்டங்கள் பேசி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அவை நிராகரிக்கப்பட்டு இப்போது இறுதியாக ஒன்றைத்தான் கேட்கின்றோம். எமது மக்களுக்கு அவசரமான மனிதாபிமான வாழ்க்கைப் பிரச்சினைகள் உள்ளன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இடைக்கால ஒழுங்கு ஒன்றை செய்து அதன் அடிப்படையில் வெளிநாடுகள் வாக்குறுதியளித்த நிதியுதவியைப்பெற்று அவசரமாக எமது மக்களுக்கு தேவைப்படுவனவற்றை உருப்படியாக செய்யவேண்டும். அதற்காகத்தான் நாம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை கேட்கின்றோம் எனவும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இடைக்கால தன்னாட்சி வரைபை அடிப்படையாக வைத்து பேச்சுக்களை அரசு ஆரம்பிக்க வேண்டும். பேச்சுவார்த்தை மேசையில் வைத்து பேச வேண்டிய அடிப்படை விடயங்களை ஊடகவியலாளர் மூலம் அல்லது நிபுணர்கள் மூலம் அரசுதரப்பில் தெரிவித்துக் கொண்டிருக்கிறதே தவிர உருப்படியாக ஏதும் இல்லை. எமது வரைபு இறுதியான ஒன்றல்ல. இதை அடிப்படையாக வைத்து பேசவரவேண்டும். அதற்கு தயார் என்பதை அரசுக்கு சொல்லி அனுப்பியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆனால் அரசின் நிலைப்பாடு என்னவெனில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்ற வரம்புக்குள் பேசாது ஒரு நிரந்தரத் தீர்வுடன் இணைந்ததாக இந்தத் திட்டத்தை பற்றிப் பேசுவோம், நிரந்தரத்தீர்வு பற்றி பேசுவோம் என்பதையே சந்திரிகாவின் யோசனைகள் வலியுறுத்துகின்றன எனவும் அவர் கூறினார்.

இந்திய, இலங்கை கூட்டறிக்கை சம்மந்தமாகக் கேட்டபோது இந்தியாவுடன் சேர்ந்து விடப்படும் கூட்டறிக்கையை நாங்கள் ஏற்க வேண்டும். என்ற கட்டாயம் எமக்கில்லை அது அரசாங்கத்தின் கருத்து தமிழ் மக்கள் இடைக்கால நிர்வாக சபைக்கு ஒரு ஆணையைக் கொடுத்து இருக்கிறார்கள். 22 பேரை பாராளு மன்றத்திற்கு அனுப்பியுள்ளார்கள். மக்கள் ஆணை இருக்க இதைப்பற்றி பேசுவதில் ஒரு சிக்கலும் இல்லை. சமஸ்டி முறையிலான தீர்வுக்கு பிரபாகரன் தயார் என்று சொன்னால் இடைக்கால நிருவாகம் பற்றிப் பேசுவோம் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இதைப்பற்றி விதித்த கொள்கைத் திட்டம் பற்றித் தேசியத் தலைவரின் மாவீரர் தின உரையைப் பார்த்து த்தான் தெரியும் எதிர்வரும் மாவீரர் தின உரையிலும் விளக்குவார் என்றார். ஓஸ்லோப் பிரகடனம் என்று ஒன்றில்லை இந்த ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஒவ்வொன்றின் முடிவிலும் பத்திரிகை அறிக்கை வெளியிடுவது வழக்கம் அதில் சம ஸ்ட்டி அடிப்படையில் ஒரு தீர்வை ஆராய்வோம். என்று சொல்லியிருக்கின்றோம். அதை வைத்துக் கொண்டு நாங்கள் தனியரசைக் கைவிட்டுவிட்டோம் என்று சொல்ல முடியாது அதை நோர்வேயிடம் தெளிவாக விளக்கியுள்ளோம். அவர்களின் பிரதான கொள்கைத் திட்டம் தலைவரின் மாவீரர் தின உரையில் விளக்கமாகச் சொல்லப் படும். உடனடியாகப் பேச்சு ஆரம்பிக்கக்கூடிய சாத்தியம் ஏதாவது ஏற்பட்டிருக்கின்றதா? என்று கேட்ட போது:- சமிக்ஞை நாங்கள்தான் கொடுத்திருக்கின்றோம். எல்லாவற்றையும் சகித்து எமது மக்களுக்கான அடிப்படை மனிதாபிமான வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசுவோம்.

மாவீரர் தின உரையில் பேச்சுவார்த்தை சம்மந்தமான ஏதும் காலக்கேடு விதிக்கப்படுமா? என்று கேட்டபோது:- தலைவர் என்ன சொல்லப்போகின்றார்? என்பதை நாங்கள் சொல்லமுடியாது இன்றைய புறநிலையை ஆராய்ந்து அவர்தான் முடிவு எடுப்பார்.

27ம் திகதி எவ்வாறான உரையை வெளியிடுவார் என்பதை நாங்கள் இப்போதைக்கு சொல்ல முடியாது என்றார். போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றிக் கேட்ட போது:- அது நடைமுறையில் இரு க்கின்ற போதும் அதிலுள்ள உறுதிப்பாட்டை அரசு உண்மையாக கடைப்பிடிக்கவில்லை நாங்கள் இதைப் பேண வேண்டும் என்பதற்காக பொறுமையைக் கடைப்பிடிக்கின்றோம். நாங்கள் இன்றும் சமாதான முயற்சியில் உறுதியாக நம்பிக்கை வைத்துள்ளோம்.

யுத்தம் பற்றிக் கேட்டபோது:- மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. போர் நிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதன் காரணம் இந்த யுத்தத்தை தவிர்ப்பதற்கு ஆனால் யுத்தத்துக்குரிய சூழலை அரசாங்கம் உருவாக்கிக் கொண்டு வருகின்றது. அதையும் நாங்கள் மறுக்கவில்லை. போருக்கு த[illegible]ான வேலைகளை அரசாங்கம் செ[illegible]கின்றது. ஆனால் நா[illegible]ள், எங்கள் மக்கள் சிங்கள மக்கள் போரை விரும்பவில்லை. இப்படியே [illegible]டிக்கவும் முடியாது எனக் கூறினார்.

இந்திய இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிக் கேட்டபோது:- இங்கு சமாதானம் நிலவுகின்றது. எந்த அன்னியப் படையெடுப்புக்கும் இலங்கை அமையப் போவதில்லை இந்தியா இராணுவ புலனாய்வு ரீதியாக தொடர்ந்து பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை. ஒப்பந்தம் செய்து பெருமளவு உலை வைக்க முற்பட்டால் இங்குள்ள இராணுவச் சமநிலை பாதிக்கும் இராணுவச் சமநிலையில்தான் போர் நிறுத்தம் உள்ளது அது பாதிக்கப்பட்டால் போர் நிறுத்தம் பாதிக்கும். தமிழகத் தலைவர்களும் இப்பிரச்சினை தொடர்பாக டில்லியில் மத்திய அரசுடன் பேசியுள்ளார்கள்.

இங்கு இலங்கை இந்திய ஒப்பந்தத்தை செய்வதற்கு இந்தியா தாமதித்து இருக்கின்றது. செய்யமாட்டாது என்று நாங்கள் சொல்ல முடியாது. தமிழ் மக்களின் உணர்வுகள் எப்படி இருக்கின்றது. என்பதை இந்திய மத்திய அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தி இருக்கின்றோம் என்றார்.

---

**(யசீர் அரபாத்...)**

கலந்து கொள்வதற்காக புறப்பட்டுச் செல்கின்றனர். இதேவேளை யசீர் அரபாத்தின் பூதவுடல் பலஸ்தீனக் கொடி போர்த்தப்பட்டு, பிரான்ஸ் விமான நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பூதவுடலுடன் அவரது துணைவியார் சுஹாவும் செல்கின்றார்.

கைரோ நகரில் இராணுவ மரியாதையுடன் இறுதிச் சடங்கு இன்று நடைபெறும் அதேவேளை மேற்கு நகரமான அல்-இக்ஷா நகரிலிருந்து எடுத்து வரப்பட்ட மண்ணில் கொங்கிறீட் கலவை சேர்ந்த பெட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

இது அவரது இலட்சியக் கனவை நனவாக்கும் பொருட்டு அவர் பிறந்த ஊரான ஜெருசலேமிற்கு ஏதோ ஒரு நாள் எடுத்துச் செல்லப்படும் என்ற நம்பிக்கையில் தயாரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

**(அரபாத்தின் மறைவினால்...)**

சகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் இழப்பு பலஸ்தீன மக்களுக்கு ஒரு பேரிழப்பு. இன்றைய இக்கட்டான வேளையில் அவரின் இழப்புக்கு விடுதலைப் புலிகள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்பு முழுமையான ஆதரவினை கொடுத்து வந்திருக்கிறது. பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழீழ மக்களும் முழுமையான ஆதரவினை வழங்கி வருகின்றனர். அரபாத்தின் இழப்பு பலஸ்தீன மக்ளுக்கு ஒரு பேரிழப்பு. அதற்காக நாம் ஆழமாக வருந்துகிறோம். இந்த இக்கட்டான வேளையில் அவர் காலமாகியதையிட்டு நாம் வருந்துகிறோம். ஆனாலும் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் தொடர்ந்து நடைபெற வேண்டும். பலஸ்தீன மக்களுக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்பதில் நாம் உறுதியான நம்பிக்கையுடன் இருக்கின்றோமென அவர் மேலும் தெரிவித்தார்.

## கந்தசஷ்டி விரதம்

(நமது நிருபர்)

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் கேதார கௌரி விரத காப்பு எடுக்கும் வைபவம் இன்று நடைபெறவுள்ளது. இதனையடுத்து நாளை சனிக்கிழமை கந்த சஷ்டிவிரதம் ஆரம்பமாகிறது.

**(மட்டு.காத்தான்குடியில்...)**

செய்யப்படுகின்றன.

இதேவேளை காத்தான்குடி பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த மார்க்கப் பிரச்சினை சுமுக நிலை தோன்றியதை அடுத்து மாலை 4.00 மணி தொடக்கம் நள்ளிரவு 12.00 மணிவரை மக்கள் கூட்டமாக கடைகள் தோறும் நிரம்பிக் காணப்படுகின்றனர்.

**(மாவீரர் தினத்தை...)**

ந்த சுமார் 400க்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றனர். சிகிச்சைக்காக வந்தோர் பெரும்பாலானோர் சிறுவர்களும், கர்ப்பிணித் தாய்மார்களுமாவர். இவர்களில் சிறுவர்கள் 130 பேர், கர்ப்பிணித் தாய்மார் 37 பேர், முதியவர்கள் 160 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பற்சிகிச்சை, தோல்நோய், கண்நோய்போன்றவற்றிற்கும் சிகிச்சையளிக்கப்பட்டன.

காலை தொடக்கம் மாலை 05.00 மணி வரை நடைபெற்ற இந்த மருத்துவ சேவையில் தமிழீழ மருத்துவப் பிரிவைச் சேர்ந்த வேணியன், அன்பு, கீர்த்தனா, வினோதரன், தர்மினி ஆகியோர் சிகிச்சை வழங்கினர்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 12.11.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.